


04.05.2025

தலைப்பு செய்திகள்

- ஆர்க்டிக் பகுதியின் வளர்ச்சி நம்நாட்டின் மேம்பாட்டிற்கு இன்றியமையாதது என்று மத்திய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- வேவ்ஸ் ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடு இன்றுடன் நிறைவடைகிறது.
- MBBS, BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
    - இத்தேர்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.
- மதுரையில் அரசு பொருட்காட்சியை மாநில வணிகவரித் துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று துவக்கி வைத்தார்.
- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகளை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாட்னாவில் இன்றுமாலை முறைப்படி தொடங்கிவைக்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஆர்க்டிக் பகுதியின் வளர்ச்சியில் இந்தியா தனிகவனம் செலுத்தி வருவதாக மத்திய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று Arctic Circle India கூட்டமைப்பில் உரையாற்றியஅவர், Arctic பகுதியின் வளர்ச்சி இந்தியாவிற்கு மட்டுமல்ல, சர்வதேச நாடுகளுக்கும் இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

இந்தியா சில ஆண்டுகளுக்கு முன்பு ஆர்டிக் கொள்கையை வகுத்ததாக கூறியஅவர், நார்வேயின் Sval bard செயற்கை கோள் நிலையத்துடன் இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தம் நம்நாட்டின் விண்வெளி துறைக்கு பயனளிக்க கூடியது என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

Waves உச்சிமாநாடு

Music - Voice

மும்பையில் நடைபெறும் வேவ்ஸ் ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடு இன்றுடன் நிறைவடைகிறது.

4-ம் நாளான இன்று திரைப்பட தயாரிப்பு மற்றும் கலாச்சாரம் குறித்த சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

15 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிதி திரட்ட இம்மாநாடு வகை செய்வதாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் இம்மாநாட்டில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிரதமர் திரு.நரேந்திரமோடி தொடங்கிவைத்த இம்மாநாட்டில் திரைப்படம், இசை, அனிமேஷன் துறைகளில் 800 கோடி ரூபாய்க்கும் மேல் வணிக பரிவர்த்தனை நடைபெற்றது.

வளர்ந்துவரும் படைப்பாளர்களுக்கு அவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு வேவ்ஸ் உச்சிமாநாடு வகை செய்தது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் 90 நாடுகளை சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், ஆயிரக்கணக்கான கலை மற்றும் ஊடகத் துறையினரும், 650 நிறுவனங்களும் இதில் பங்கேற்றன.

இம்மாநாட்டில் 42 முழுமையான அமர்வுகள் இடம்பெற்றன.

Music - Voice

❖❖❖❖❖❖❖

பிரதமர்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரான ஆண்டனி அல்பனீஸுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், இந்திய பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மையை முன்னெடுத்துச் செல்ல இணைந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

..

சிங்கப்பூர் பொதுதேர்தலில் அந்நாட்டு பிரதமர் லாரன்ஸ்வாங்கின் மக்கள் செயல்கட்சி வெற்றி பெற்றதற்கும், பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த தாம் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்

❖❖❖❖❖❖❖

ஜம்முகாஷ்மீர்

ஜம்முகாஷ்மீர் மாநிலம் குப்வாரா, பாரமுல்லா, புஞ்ச் உள்ளிட்ட எல்லையோர பகுதிகளில் நேற்றிரவு பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியதற்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி தாக்குதல் நடத்தியது.

❖❖❖❖❖❖❖

Hawk eye – 360

நாட்டின் கண்காணிப்பு திறன்களை அதிகரிக்க வகைசெய்யும் Hawk eye - 360 தொழில்நுட்பத்தை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் நாட்டின் கடல்சார் விழிப்புணர்வை மேம்படுத்தவும், தீவிரவாத அச்சுறுத்தல்களை முனைப்புடன் எதிர்கொள்ள இது வழிகோலும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

நீட்

MBBS, BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவு தேர்வு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

இத்தேர்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

நாடுமுழுவதும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களிலும், வெளிநாடுகளில் 13 நகரங்களிலும் 22 லட்சத்து 70 ஆயிரம் பேர் இத்தேர்வை எழுதுகின்றனர்.

தமிழகத்தில் ஒன்றரை லட்சம் மாணாக்கர் இத்தேர்வை எழுதவுள்ளனர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி உட்பட 13 மொழிகளில் இத்தேர்வு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

மூர்த்தி

மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை மாநில வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று துவக்கிவைத்தார்.

செய்தி மக்கள் தொடர்பு, வருவாய் பேரிடர், ஊரக வளர்ச்சி, வேளாண்மை, பள்ளி கல்வி, இந்துசமய அறநிலையத்துறை உள்ளிட்ட 27 அரசுதுறை அரங்குகள், மக்கள் நலத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்த காட்சியரங்குகள் ஆகியவற்றை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின் போது ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா உடனிருந்தார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நாளை சென்னையில் நடைபெறும் தமிழ்வார நிறைவு விழாவில் பங்கேற்று 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்குவதோடு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖

விபத்து

கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகம் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த 2 சிறார்களின் பெற்றோர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைபூண்டி அருகே கருவேப்பஞ்சேரி என்ற இடத்தில் கேரளாவில் இருந்து வேளாங்கண்ணிக்கு சுற்றுலா வந்த வேனும், அரசு பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்தனர்.

❖❖❖❖❖❖❖

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதால் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா தெரிவித்துள்ளார்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் பொதிகை படகில் ஏற்பட்டுள்ள பழுது காரணமாக படகு போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

ரயில்

திண்டுக்கல் - நாகர்கோவில் இடையே நாளைமுதல் வரும் 31-ம் தேதிவரை முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளது.

புதன் மற்றும் வியாழக்கிழமை நீங்கலாக ஏனைய நாட்களில் இயக்கப்படும் இந்த ரயில் திண்டுக்கல்லிலிருந்து பிற்பகல் 3.45க்கு புறப்பட்டு இரவு 9.05க்கு நாகர்கோவில் சென்றடையும்.

❖❖❖❖❖❖❖

இருவரி

ஈரோட்டில் இயற்கை வேளாண் சந்தையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ராஜகோபால் சுன்ங்கரா இன்று தொடங்கிவைத்தார்.

இயற்கைமுறையில் சாகுபடி செய்த விவசாய பொருட்களையும் அவர் பார்வையிட்டார்.

நாகை மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் விலை ஆதரவு திட்டத்தில் பதிவுசெய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற வரும் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் காவல் உதவி ஆய்வாளர் தேர்விற்கு இணையதளத்தில் விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் வரும் 10-ம் தேதிவரை நீட்டிக்கப் பட்டுள்ளதாக சீருடை பணியாளர் தேர்வுவாரியம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

அக்னி நட்சத்திரம்

அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் இன்று தொடங்கி வரும் 28-ம் தேதிவரை நீடிக்கும்.

இச்சமயத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பொதுமக்கள் வெளியில் செல்வதை தவிர்ப்பதோடு தண்ணீர், நீர்மோர், இளநீர், பழங்கள் உள்ளிட்டவற்றை அதிகளவில் எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖

கோவில்

நெல்லை மாவட்டம் பாபநாசம் அருள்மிகு பாவநாச சுவாமி திருக்கோவிலின் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திருச்சி மாவட்டம் லால்குடியை அடுத்த அன்பில் ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கோடை விடுமுறையை ஒட்டி திருச்செந்தூர் மற்றும் பழனி திருத்தலங்களில் பக்தர்கள் அதிகளவில் சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

தஞ்சை பூண்டி மாதா பேராலய ஆண்டு பெருவிழா நாளை மறுநாள் கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்வான ஆடம்பர தேர்பவனி வரும் 14-ம் தேதி நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 108.12 அடியாக உள்ளது.

அணைக்கு 4 ஆயிரத்து 105 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது

குடிநீர் தேவைக்காக ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று 4 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில் கிழக்கு மற்றும் மேற்குதிசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால் கோவை மாவட்ட மலைப்பகுதிகள்,

அரியலூர், பெரம்பலூர், கரூர், திருச்சி, கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், நீலகிரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகளை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பீஹார் பாட்னாவில் இன்றுமாலை முறைப்படி துவக்கிவைக்கிறார்.

பாட்னா, ராஜ்கிர், கயா, பஹஸல்பூர், பெகுசராய் ஆகிய 5 இடங்களில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன

மொத்தம் 28 பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் துப்பாக்கி சுடுதல், ஜிம்னாஸ்டிக், டிராக் சைக்ளிங் ஆகிய போட்டிகள் மட்டும் புதுதில்லியில் நடைபெறுகிறது.

முதல் நாளான இன்று வில்வித்தை, கபடி, வாலிபால் ஆகிய போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

மேட்ரிட் ஓப்பன் மகளிர் டென்னிஸ் சாம்பியன் பட்டத்தை பெலாரசின் சபெலென்கா வென்றுள்ளார்.

இறுதிப்போட்டியில் அவர் அமெரிக்காவின் Coco Gauff-ஐ 6-3, 7-6 என்ற நேர் செட்களில் வென்று பட்டத்தை கைப்பற்றினார்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில், கொல்கத்தாவில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் இன்றிரவு ஏழரை மணிக்கு பஞ்சாப் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

❖❖❖❖❖❖❖